# சபாநாயகர் மீதான நம்பிக்கையை நாங்கள் இழந்ததால் அவருக்கு எதிராகப் பிரேரணை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விளக்கம்




சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை ஆகிய இரண்டையும் மீறியதால் அவர் மீதான நம்பிக்கையை இழந்துள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இன்று கையெழுத்திட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நமது நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பில் நிறைவேற்று, சட்டமன்றம் மற்றும் நீதித்துறை ஆகிய 3 முக்கிய தூண்கள் செயற்படுகின்றன. சட்டங்களை ஏற்றுக கொள்வது சட்டமன்றத்தின் மூலம் செயற்படுத்தப்படுவதோடு, அதன் சட்ட மற்றும் அரசமைப்பு அமுலாக்கம் சபாநாயகர்தலைமையிலான அதிகாரிகளின் பொறுப்பாகும். நிகழ்நிலைக் காப்புச் சட்டம் சட்டவிரோதமான முறையிலயே சட்டமாக மாறியுள்ளது.

இந்தச் சட்ட வரைவு குறித்து உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மற்றும் தீர்ப்புகளை முற்றிலுமாக நிராகரித்து, சபாநாயகர் தலைமையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அவர் கையெழுத்திட்டு, உயர் நீதிமன்றத்தின் உயர் சட்டத்தை மீறி சட்டவிரோதமான முறையில் இதை நாட்டின் சட்டமாக்கியுள்ளார். இதன் மூலம் சபாநாயகர் அரசமைப்புச் சட்டத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளையும் மீறியுள்ளது.

2


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 14 திங்கட்கிழமை 26.02.2024 கதிர் 200







## சபாநாயகருக்கு எதிரான பிரேரணையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை ஆரம்பம்



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகியுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றும்போது மேற்படி சட்டமூலம்தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரித்துரைகளை சபாநாயகர் சரியாக அமுல்படுத்தாமை, அரசமைப்பு, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் மற்றும் நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக்கொண்டே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர்

2

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் 5ஆம்திகதி வரையில்நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் மற்றும் பிற உயர்மட்டப் பிரதிநிதிகள் அமர்வின் தொடக்கத்தில் சுருக்கமான தொடக்க உரைகளை வழங்கவுள்ளனர்.

அதேநேரம் இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலோ அல்லது வேறு அமைச்சர்கள் தலைமையிலான குழுவினரோ இந்த முறை குறித்த கூட்டத்தொடரில் பங்கேற்கமாட்டார் என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இலங்கையின் மனித உரிமை நிலைமைகள்

2

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இன்று காலை சுட்டுக்கொலை

காலி, எல்பிட்டிய - பத்திராஜவத்த பகுதியில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இனந்தெரியாத இருவர், வீட்டிலிருந்த குறித்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கரந்தெனிய பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றி வரும் 51 வயதுடைய குடும்பஸ்தர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்துக்கான காரணம் தெரியவராத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## இலங்கைக் கடல் எல்லையில் கறுப்புக்கொடிப் போராட்டம்!

*இலங்கைக் கடல் எல்லையில் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கறுப்புக்கொடி போராட்டத்தை முன்னெடுக்கவுள்தாக யாழ் மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் தெரிவித்துள்ள.*

*இன்றையதினம் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.*

*(01)*

## கடன் தொகை 28 பில்லியனாக அதிகரிப்பு தனிநபர் ஒருவர் ரூ. 12.5 லட்சம் கடனாளி!

### பேராசிரியர் வசந்த அத்துகோரள தகவல்



2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் நிலவரப்படி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசாங்கம் பெற்றுள்ள மொத்த கடன் தொகை 28094.69 பில்லியன் ரூபாய் எனவும் அதன்படி தனிநபர் கடன் தொகை 12,65,000 ரூபாயாக அமைந்திருந்ததாகவும் பேராதெனிய பல்கலைகழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளி விபரவியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இதன்படி, நான்கு பேர் கொண்ட குடும்பமொன்றிற்காக அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடன் தொகை 50,60,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 2020 ஆம் ஆண்டளவில் நாட்டின் தனிநபர் கடனின் அளவு கிட்டத்தட்ட 690,000 ரூபாவாக இருந்தது. 2021 ஆம் ஆண்டளவில் அது 8 இலட்சம் ரூபாவைத் தாண்டியிருந்த போதிலும், கடந்த மூன்று வருடங்களில் இந்தத் தொகை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்தக் கடனை கருத்தில் கொண்டால் அது 13,031 பில்லியன் ரூபாவாகும். 2020 இல் 15,117 பில்லியனாகவும், 2021 இல் 17,614 பில்லியனாகவும், 2022 இல் இது 27,492 பில்லியன் ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

அதன்படி, 2019 ஆம் ஆண்டுக்குள் தனி நபர் ஒருவருக்காக அரசாங்கம் பெற்றுள்ள கடன் தொகை 598,000 என அமைந்ததுடன் இத்தொகை 2020 இல் 690,000 ஆகவும், 2021 இல் 795,000 ஆகவும் அதிகரித்துள்ளது. இதன் போது

2

## மத்திய வங்கி ஊழியர் சம்பள அதிகரிப்பு நாடாளுமன்றம் விளக்கம் கோரியுள்ளது

*நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான அனைத்து தகவல்களையும் விபரங்களையும் நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறு மத்திய வங்கியிடம் நாடாளுமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.*

*இதன்படி, நாடாளுமன்ற நிதிக் குழுவிற்கு அல்லது வேறு ஏதேனும் ஒரு குழுவிற்கு இது தொடர்பான அனைத்து விபரங்களையும்வழங்கத்தயாராக இருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

*2019 ஆம் ஆண்டிற்கு முன்னர், மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத்திற்கான வரிகளை மத்திய வங்கியே செலுத்தியதாகவும், ஆனால் 2019 ஆம் ஆண்டின் பின்னர்,*

*அதே வரிகளை மத்திய வங்கி ஊழியர்களே அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியேற்பட்டதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

*(ரெப-58)*

## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான முன்னேற்றகரமான விடயங்கள் தொடர்பான சமர்ப்பணங்களை ஜெனிவாவில் உள்ள வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்க முன்வைக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அவதானிப்பு அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 4ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதையடுத்து, ஜெனிவாவுக்கான இலங்கை வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்க அந்த வாய்மொழி அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான பதிலளிப்பை வழங்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பின் ஆறாவது அமர்வு கென்ய தலைநகர் நைரோபியில் இன்று முதல் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

காலநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு, சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் கழிவுப் பிரச்சினை போன்ற நெருக்கடிகளுக்கான தீர்வுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது. (அ)

## சபாநாயகருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற சந்திம வீரக்கொடி , ஷான் விஜயலால் டி சில்வா ஆகியோர் கையொப்பம் இட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனும் இதில் கையொப்பமிட்டார். (அ)

## சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சபாநாயகர் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் சட்டத்தைப் பின்பற்றி, சட்டங்களைச் சரியாகவும் முறையாகவும் நிறைவேற்ற வேண்டும். அதை அவர் வேண்டுமென்றே மீறினார். எனவே, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றும் நடவடிக்கையில் சபாநாயகரின் செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன. அவர் மீதான நம்பிக்கை அற்றுப்போயுள்ளது.

நான் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல தடவைகள் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் இந்தத் தவறை சரி செய்யுமாறு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த போதும், அதனை வேண்டுமென்றே நிராகரித்ததன் மூலம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அத்தகைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் இல்லை என்பதனால் நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளோம். அடுத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப்பட்டு, அதன் பின்னர் இவ்விவகாரத்தை உடனே விவாதத்துக்கு எடுத்து பதவியில் இருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுப்போம்." - என்றார். (அ)

## கடன் தொகை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தனிநபர் கடனின் அளவு மிகச் சிறிய அளவில் அதிகரித்துள்ளது. அதாவது வருடமொன்றிற்கு ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே அதிகரித்துள்ளது. ஆனால், 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் இது சடுதியாக பல மடக்கில் அதிகரித்திருப்பதை அவதானிக்கலாம்.

இதுதவிர அரசாங்கம் தனி நபருக்காக பெற்றுள்ள கடன் தொகை 50 லட்சத்தை தாண்டியுள்ள அதேவேளை, நாட்டின் தனி நபர்களில் அநேகர் தனிப்பட்ட ரீதியில் நிதி நிறுவனங்களில் கடன்களை பெற்றுள்ள நிலையில் இன்னும் பலர் தங்க ஆபரணங்களை அடகு வைத்தும் கடன் பட்டுள்ளனர் எனவும், இந்நிலையில் பலர் கடனை செலுத்த முடியாத இக்கட்டில் உள்ளதாகவும் வசந்த அத்துகோரல மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-57)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# 'புலதுசி' கடுகதி ரயில் மோதி இளைஞர் சாவு

மட்டக்களப்பில் ரயில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கோட்டையிலிருந்து நேற்று மாலை 3.05 மணிக்கு மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்ட புலதுசி கடுகதி ரயில், இரவு 10.20 மணியளவில் மட்டக்களப்பு, திராய்மடுவ பிரதேசத்தை அண்மித்த பகுதியில் இளைஞர் மீது மோதியுள்ளது.

கருவப்பங்கேணி, சிவநாகதம்பிரான் வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய மேற்படி இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# யாழ். பொலிஸ் விடுதிக்குள் மதுபோதையில் அட்டகாசம் புரிந்த இரண்டு பொலிஸார் கைது

யாழ்ப்பாணம் பொலிஸாரின் விடுதிக்குள் மதுபோதையில் அட்டகாசம் புரிந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கியிருக்கும் விடுதிக்குள் மதுபோதையில் நுழைந்து சக பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுகின்ற பொலிஸாரே இவ்வாறு செயற்பட்டமை பலரையும் முகம் சுழிக்க வைத்துள்ளது. (அ)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு நுழைவுச்சீட்டு அறிமுகம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் எதிர் வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ள 12 ஆவது சர்வ தேச ஆய்வரங்கு மாநாட்டுக்கான நுழைவுச்சீட்டுக்களை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வும் தனியார் துறை நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கி வைக் கும் நிகழ்வும் பல்கலைக்கழக நினைவுச் சின்னத்-திற்கு முன்பாகவுள்ள திறந்த வெளியில் மாநாட்டின் இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தலை மையில் இன்று இடம்பெற்றது.

உள்ளூர் தனியார் துறை நிறுவனங்களின் தலை வர்கள் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள், நூலகர், பேராசிரியர்கள் திணைக்களங்களின் தலைவர்கள் விரிவுரையாளர்கள் பிரதி நிதியாளர் என பலரும் கலந்து கொண்டிருந்த நிகழ்வில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

29 ஆம் திகதி இடம்பெறவுள்ள "Digital Transformation for a Sustainable Future" எனும் தொனிப்பொருளில் குறித்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்குக்கு பிரித் தானியாவின் க்னொசெஸ்டர்ஷையர் பல்கலைக்கழகத் தின் கணினி மற்றும் பொறியியல் துறையின் தலைவர், பேராசிரியர் கமால் விச்கோம் பிரதான பேச்சாளராக கலந்து கொள்ளவுள்ளார்.

குறித்த மாநாட்டில் 200 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவுள்ளமையும். குறிப் பிடத்தக்கது.




# ஏறாவூர் நகரசபை பொது நூலகங்கள் நடாத்திய தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு!



(எம்.எம்.றம்ஸீன்)

ஏறாவூர் நகர சபை பொது நூலகங்கள் இணைந்து நடாத்திய தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் ஞாயிற்றுக்கிழமை ஏறாவூர் நகர சபையின் விசேட ஆணையாளர் எம்.எச்.எம்.ஹமீம் அவர்களின் தலைமையில் ஏறாவூர் நகரசபை பொது நூலக வளாகத்தில் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான செய்யித் அலிஸாஹிர் மௌலானா பிரதம அதிதி யாக கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர சபையின் கணக்காளர் ஆர்.எப்.புஷ்ரா, ஏறாவூர் நகர சபையின் நிருவாக உத்தி யோகத்தர் திருமதி நபீறா றசீன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஹாறூன் உட்பட ஏறாவூர் நகரசபை எல்லைக் குட்பட்ட பாடசாலையின் அதிபர்கள், மாண வர்கள் ஏறாவூர் நகர சபை உத்தியோகத் தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

ஏறாவூர் நகரசபை பொது நூலகங்கள் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடாத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, வீட்டிற்கு ஒரு நூலகம் போன்ற போட்டிக ளில் கலந்து கொண்ட மற்றும் வெற்றி பெற்றவர்கள், நூலகங்களில் கடமை புரிந்து ஓய்வு பெற்றுச் சென்ற-வர்கள், நூலகங்களில் அர்ப்பணிப்போடு கடமை புரிந்த வர்கள் ஆகியோருக்கு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# பெரிய கோமரசன்குளம் மகா வித்தி. மாணவிகள் தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் சாதனை




(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகளான பீ.கே.கிசாளினி, ரீ.வன்சிகா ஆகிய மாணவிகள் முதலாம் இடம் பெற்று தங்கப் பதக்கங்களையும், கே.அபிசாளினி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளி-ப்பதக்கத்தையும், எஸ்.அனுசா மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தையும் பெற்று மாவட்ட-த்திற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இப்போட்டி காலி போத்திவெவ தேசிய பாடசாலையில் கடந்த வாரம் இடம்பெற்றது.



# ஹூதி கிளர்ச்சியாளர்களின் தளங்களைக் குறிவைத்து அமெரிக்க – பிரிட்டன் ராணுவங்கள் மீண்டும் தாக்குதல்!



யேமனில் ஹூதி கிளர்ச்சியாளர்களின் தளங்களைக் குறிவைத்து 4 ஆவது முறையாக அமெரிக்க - பிரிட்டன் ராணுவங்கள் சனிக்கிழமை தாக்குதல் மேற்கொண்டுள்ளன.

இஸ்ரேலுக்கு எதிராகப் போர் புரிந்து வரும் ஹமாஸ் படையினருக்கு ஆதரவாக செங்கடலில் இஸ்ரேல் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று யேமன் நாட்டைச் சேர்ந்த ஹூதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

அதன்படி, செங்கடல் மற்றும் அதையொட்டி உள்ள ஏடன் வளைகுடா கடற்பகுதி வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது கடந்த ஆண்டு நவம்பர் முதல் அவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதுவரை செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடா வழியாகச் சென்ற சரக்கு மற்றும் பிற நாடுகளின் கடற்படை கப்பல்கள் மீது சுமார் 57 முறை அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அந்தக் கிளர்ச்சியாளர்களுக்கு ஈரானின் ஆதரவு உள்ள நிலையில், ஹூதிக்களுக்கு பதிலடி அளிக்கும் விதமாக, யேமனில் அந்தக் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் மீது அமெரிக்கா, பிரிட்டன் போர் விமானங்கள் சனிக்கிழமை தாக்குதல் மேற்கொண்டன. இதன் மூலம் 4 ஆவது முறையாக இருநாட்டு ராணுவங்களும் இணைந்து ஹூதிக்களின் தளங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தின.

இந்த முறை ஹூதிக்கள் பதுக்கிவைத்துள்ள ஆயுதங்கள், ஏவுகணைகள், ஏவுகலன்கள், எறிகணைகள், ட்ரோன்கள், ராடார், ஹெலிகொப்டர் உள்ளிட்டவற்றைக் குறிவைத்து 8 இடங்களில் உள்ள 18 தளங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லொயிட் அஸ்டின் கூறுகையில், 'தங்கள் தாக்குதல்களை ஹூதிக்கள் நிறுத்தாவிட்டால், அதற்கான பின்விளைவுகளை அவர்கள் சந்திக்க நேரும் என்பதை தெளிவாக எடுத்துரைக்க தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று தெரிவித்தார்.

எனினும் அமெரிக்கா - பிரிட்டன் தாக்குதல்களால் தாங்கள் பின்வாங்கமாட்டோம், என்று ஹூதிக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில், யேமன் நாட்டையும் மக்களையும் பாதுகாக்க விரோதிகளின் அனைத்து இலக்குகளையும் குறி வைத்து, மேலதிக ராணுவ நடவடிக்கைகளுடன் செங்கடல் மற்றும் அரபிக் கடற்பகுதிகளில் அமெரிக்க - பிரிட்டனின் தீவிர தாக்குதலை எதிர்கொள்வோம் என்று தெரிவித்துள்ளனர்.

ஹூதிக்களின் தாக்குதல் தொடர்பாக அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் செய்தித் தொடர்பாளர் சப்ரினா சிங் அண்மையில் கூறியபோது, யேமனில் அமெரிக்கா தனியாக 32 தாக்குதல்களை நடத்தியுள்ளது. அதேவேளையில், பிற நாட்டுடன் இணைந்து கூட்டுத்தாக்குதலையும் மேற்கொண்டுள்ளது. எனினும் ஹூதிக்கள் பின்வாங்கவில்லை. அவர்களின் தாக்குதல் தொடர்ந்து அதிகரித்துள்ளது. அவர்களிடம் அதிக அளவில் ஆயுதங்கள் உள்ளன. ஈரானிடம் இருந்து அவர்கள் அதிநவீன ஆயுதங்களைப் பெறுகின்றனர்.

இதனிடையே கடந்த சனிக்கிழமை யேமனில் ஹூதிக்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்து ஏடன் வளைகுடா நோக்கி ஏவப்பட்ட ஏவுகணையை அமெரிக்க போர்க் கப்பல் சுட்டு வீழ்த்தியது. அந்த ஏவுகணை ஏடன் வளைகுடா வழியாக பயணித்த அமெரிக்க ரசாயனம் மற்றும் எண்ணெய்க் கப்பலை குறிவைத்து ஏவப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது, என்று தெரிவித்திருந்தார். (04)



# பாகிஸ்தானில் அதிபர் தேர்தல் மார்ச்சில் நடைபெறுமென தகவல்

பாகிஸ்தான் அதிபர் தேர்தல் மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில், 'பாகிஸ்தான் அதிபர் தேர்தல் மார்ச் 9 அல்லது 10 ஆம் திகதியில் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படவுள்ளது. தேசிய மற்றும் மாகாண பேரவை உறுப்பினர்கள் மற்றும் மேலவை உறுப்பினர்களால் அதிபர் தேர்ந்தெடுக்கப் படவுள்ளார் - என்றார்.

பாகிஸ்தான் மேலவையில் மொத்தமுள்ள 100 உறுப்பினர்களில் 50 சதவீத உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இரண்டு நாள்கள் முன்பே அந்நாட்டு அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலில், ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சைகள் 101 இடங்களையும், நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் பிஎம்எல் என் கட்சி 75 இடங்களையும், பிலாவல் புட்டோ ஜர்தாரியின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) 54 இடங்களையும் கைப்பற்றின.

நவாஸ் ஷெரீபின் சகோதரரான ஷாபாஸ் ஷெரீப் பிரதமராவதற்கு 6 கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. அதேபோல் அந்நாட்டின் அதிபர் தேர்தலுக்கு இக்கூட்டணியின் சார்பில் பிலாவல் புட்டோ ஸர்தாரியின் தந்தையும் முன்னாள் பிரதமர் பேநசீர் புட்டோவின் கணவருமான ஆசிப் அலி ஸர்தாரி போட்டியிடுவார் எனவும் அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் அரசமைப்பு விதி 44 (1) இன் கீழ், அதிபராக தேர்ந்தெடுக்கப்படுபவர் 5 ஆண்டுகள் பதவி வகிப்பார் என்றும், அடுத்த தேர்தல் நடத்தப்பட்டு புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் அவரின் பதவிக் காலம் நீடிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் தற்போதைய அதிபர் ஆரிப் ஆல்வியின் பதவிக் காலம் கடந்த செப்டம்பரில் முடிவடைந்த நிலையில், அது நீடிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் மேலவை உறுப்பினர்கள் 6 ஆண்டுகள் பதவி வகிப்பர். அவர்களில் 50 சதவீத உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (04)


# உறுதியளிக்கப்பட்ட ராணுவ ஆதரவு கிடைக்கவில்லை உக்ரைன் வீரர்களின் உயிர் பறிபோவதாகக் கவலை!

'உக்ரைனுக்கு உறுதியளிக்கப்பட்ட மேற்கத்திய ராணுவ ஆதரவில் பாதிக்கும் மேல் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாததால் வீரர்களின் உயிர் பறிபோகிறது' என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் தலைநகர் கீவில் நடைபெற்ற 'உக்ரைன்-2024' கருத்தரங்கில் பங்கேற்று பாதுகாப்பு அமைச்சர் ரஸ்தான் உமெரோவ் உரையாற்றியபோது, மேற்கத்திய நாடுகளிடம் இருந்து கிடைக்கப் பெற்ற ஒவ்வொரு தாமதமான உதவியும் உக்ரைன் படையினரின் இழப்புகளைக் குறிக்கிறது.

ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் தொடர்ந்து நிலைத்து நிற்க வேண்டுமானால், மேற்கத்திய நாடுகள் கூடுதல் உதவிகளை வழங்க வேண்டும். எங்களின் எதிரி நாடான ரஷ்யாவின் பொருளாதாரம் கிட்டத்தட்ட 2 லட்சம் கோடி டொலர்கள் ஆகும். போருக்காக மட்டும் குறைந்தது 15 சதவீத அதிகாரபூர்வ மற்றும் அதிகாரபூர்வமற்ற பட்ஜெட் நிதியாக குறைந்தது 10,000 கோடியை அவர்கள் ஆண்டுதோறும் செலவிடுகின்றனர். எனவே, இவர்களுக்கு எதிராகப் போராடும் எங்களுக்கு சரியான நேரத்தில் உதவி கிடைக்காததால் நாங்கள் வீரர்கள் மற்றும் நிலப்பரப்பை இழக்கிறோம்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, அமைச்சர் உமெரோவ் மற்றும் பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி ஒலெக்சாண்டர் சிர்ஸ்கி ஆகியோர் வீரர்களைச் சந்தித்து போர்ச் சூழல் குறித்து கேட்டறிந்தனர். உக்ரைன் படைகளின் நிலை கடினமாக உள்ளதாக கவலை தெரிவித்த தளபதி சிர்ஸ்கி, எல்லையின் பல பகுதிகளில் நிலையான கட்டுப்பாடு தேவை என்றார்.



உக்ரைனுக்கு ராணுவ உதவிகள் வழங்குவதற்கான முன்மொழிவு அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இதனிடையே, முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு நகரமான அவ்டீவ்காவை ரஷ்யாவிடம் இழந்து போர்க்களத்தில் உக்ரைன் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

உக்ரைனின் தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ரஷ்யா ஞாயிற்றுக்கிழமை தொடர் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் ஸபோரிஸியா மற்றும் கெர்சான் மாகாணங்களைச் சேர்ந்த பொதுமக்கள் இருவர் உயிரிழந்ததாகவும், 8 பேர் காயமடைந்ததாகவும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். (04)

# ஊழியர் வேலைநிறுத்தத்தால் மூடப்பட்ட பரிஸ் ஈபிள் கோபுரம் மீண்டும் திறப்பு!

ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் மூடப்பட்டிருந்த பரிஸ் நகர ஈபிள் கோபுரம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பார்வையாளர்களுக்கு திறக்கப்பட்டது.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம் சர்வதேச அளவில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. 135 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்தக் கோபுரம் மற்றும் அதையொட்டி அமைந்த பகுதிகளின் பராமரிப்பு உள்ளிட்ட பணிகளில் சுமார் 200 பேர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் ஊதிய உயர்வு, நுழைவுக் கட்டணத்தில் தங்களுக்குரிய பங்கை அதிகரிப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த வாரம் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கினர். பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பார்வையாளர்கள் யாரும் ஈபிள் கோபுரத்தைப் பார்வையிட அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில், ஊழியர்களுடன் நடந்த பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்பட்டதையடுத்து, ஈபிள் கோபுரம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பார்வையாளர்களுக்கு திறக்கப்பட்டது. ஈபிள் கோபுரத்தில் ஆண்டின் அனைத்து நாள்களிலும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு பிரான்ஸ் ஓய்வூதியத் திட்டத்தில் அரசு மேற்கொள்ள உத்தேசித்த மாற்றத்தை எதிர்த்து பெரும் போராட்டம் வெடித்தது. இதனால், ஈபிள் கோபுரம் 10 நாட்கள் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (04)

# சொந்த இடத்திலேயே மண் கவ்வினார் நிக்கி ஹேலி 20 சதவீத புள்ளிகள் அதிகம் பெற்ற டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்க அதிபர் வேட்பாளர் போட்டியில் சொந்த ஊரான தெற்கு கரோலினாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹேலி தோல்வியடைந்துள்ளார்.

இந்த ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க போட்டி நடைபெற்று வருகிறது. இதில் நிக்கி ஹேலியின் சொந்த ஊரான தெற்கு கரோலினாவில் அவருக்கும், அந்நாட்டின் முன்னாள் அதிபர் ட்ரம்புக்கும் இடையே சனிக்கிழமை போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஹேலியை விட சுமார் 20 சதவீத புள்ளிகள் கூடுதலாகப் பெற்று ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

ஏற்கெனவே அந்நாட்டில் உள்ள ஐயோவா, நியூ ஹம்ப்ஷைர், நெவாடா மாகாணங்கள் மற்றும் யுஎஸ் வேர்ஜின் தீவுகளில் ட்ரம்ப் வெற்றி பெற்ற நிலையில், தற்போது மேலும் ஓரிடத்தில் அவர் வெற்றி பெற்றுள்ளார். இது அதிபர் வேட்பாளர் போட்டியில் இருந்து நிக்கி ஹேலி விலகுவதற்கான அழுத்தத்தை அதிகரித்துள்ளது.

எனினும் தான் போட்டியில் நீடிப்பேன் என்று அவர் தெரிவித்துள்ளார். அதிபராக ட்ரம்ப் பதவி வகித்தபோது ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதராக பொறுப்பு வகித்த நிக்கி ஹேலி, கடந்த 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை தெற்கு கரோலினா ஆளுநராகவும் பதவி வகித்திருந்தார். (04)

# மூதூர் கிழக்கு சேனையூர் மத்திய கல்லூரியின் 67 ஆவது ஆண்டு விழாவும் நடைபவனியும்





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் மத்திய கல்லூரியின் 67 வது ஆண்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) காலை 9 .15 க்கு கல்லூரியில் கல்லூரியின் அதிபர் சோ.பாக்கியேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

பிரதான நிகழ்வாக சேனையூர் மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பமான நடை பவனி மூதூர் கிழக்கின் பிரதான வீதியின் ஊடக சேனையூர், கட்டைபறிச்சான், கடற்கரைச்சேனை வீதியின் ஊடக இடம்பெற்றது.

கல்வி அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள் நடை பவனியில் கலந்து சிறப்பித்தனர்.

பேரணியில் தமிழர் கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் வகையிலான நிகழ்வுகள் இடம்பெற்றதோடு வாகனங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் பதாதைகளும் கல்லூரியின் முன்னாள் அதிபர்களின் உருவப் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இதன்போது சேனையூர் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் தங்களது வகுப்புகளை அடையாளப்படுத்திக் காட்டும் வகையில் மேலங்கிகளை அணிந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தி பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்.

# இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு வெளியீடு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலக்கியத்துறையில் முத்திரை பதித்த, மற்றும் இலைமறை காய்களாக இருக்கும் இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் "உலகம் முழுவதும் எங்கள் கதைகள்" சிறு கதைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு கல்முனை ஆஸாத் பிளாசா வரவேற்பு மண்டபத்தில் "பென் கிளப்" தலைவி எழுத்தாளர் சித்தி மசூறா சுஹூர்த்தீன் தலைமையில் அண்மையில் (22) நடைபெற்றது.

ஆற்றலும், ஆளுமையும்மிக்க "இலங்கை பென் கிளப்" உறுப்பினர்களால், தொகுத்து வெளியிடப்பட்ட சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் புதல்வியும் ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனின் தலைவியும் அவுஸ்திரேலியா நாட்டின் முஸ்லிம் பெண்கள் கவுன்சில் தலைவியுமான சட்டத்தரணி திருமதி மரியம் நளிமுத்தீன் கலந்து கொண்டார்.

இதில் மரியம் நளீமுத்தின் அவர்களின் கணவர் கவிஞர் டொக்டர் நளிமுத்தீன் சிஹாப்தீன், பிரதி கல்வி பணிப்பாளர் ஜிஹானா ஆலிப், இணைப்பாளர் மிப்ராஸ் மன்சூர் உட்பட பெண் எழுத்தாளர்கள், இலக்கிய படைப்பாளிகள், பெண் கிளப் நிர்வாக அங்கத்தவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது பிரதம அதிதி பெண் ஆளுமை மரியம் நளிமுத்தீன் இலங்கை பெண் கிளப் அங்கத்தவர்களினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

# பெரியநீலாவணை முதியோர் நல்வாழ்வு ஒன்றியம் நாபீர் பவுண்டேஷனுக்கு இடையிலான சந்திப்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

பெரியநீலாவணை முதியோர் நல்வாழ்வு ஒன்றியம் மற்றும் நாபீர் பவுண்டேஷனுக்கு இடையிலான சந்திப்பு எம்.யோகராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாபீர் பவுண்டேஷன் சார்பாக எம். கமருஸ்சமான் ஜே.ஜாபீர், ஏ.எம்.அமீர், எஸ்.நௌபர் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தோடு நிகழ்வில் விசேட உரையினை பொறியியலாளர் உதுமானக்கண்டு நாபீரின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பாசக்கவி பாயிஸ் கரீம் நிகழ்த்தினார். நாபீர் பவுண்டேஷன் மகளிர் அமைப்பின் தலைவி றஹீமா, செயலாளர் அறபா மற்றும் றிப்தா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பெரியநீலாவணை முதியோர் நல்வாழ்வு ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் நாபீர் பவுண்டேஷனின் சமூகச் செயற்பாட்டுகள் தொடர்பாக தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

# கல்முனை மாநகர சபையின் பதில் கணக்காளர் கடமையேற்பு



(அஸ்லம் எஸ். மௌலானா)

கல்முனை மாநகர சபையின் பதில் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளவை. ஹபீபுல்லாஹ் இன்று திங்கட்கிழமை (26) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி உட்பட பிரிவுத் தலைவர்களும் உத்தியோகத்தர்களும் பங்கேறிருந்தனர்.

இதன்போது மாநகர ஆணையாளர் தலைமையில் உத்தியோகத்தர்கள் அனைவரும் பதில் கணக்காளரை வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளராக கடமையாற்றி வருகின்ற ஹபீபுல்லாஹ் அதற்கு மேலதிகமாக கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரினால் கல்முனை மாநகர சபையின் பதில் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மாணவர்களுக்கான பாடங்களை 7 ஆகக் குறைப்பதற்கு நடவடிக்கை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



6ஆம் தரத்திற்கு மேலான மாணவர்களுக்கு பாடசாலையில் கற்கக்கூடிய பாடங்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் 7 பாடங்களாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வராப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், மாணவர்கள் வாழும் அந்தந்த மாகாணங்களுக்கு ஏற்ப பூர்வீக கைத்தொழிகளை இணைத்து எஞ்சிய 3 பாடங்களையும் கற்கும் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், பாடசாலைகளுக்கு வரும் அனைத்து ஆசிரியர்களும் தகவல் தொழிநுட்ப அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்றும், அனைத்து வலயயங்களிலும் அமைக்கப்பட்டுள்ள கணினி வள மையங்கள் மூலம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பாரிய வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி வழங்கும் அதேவேளை, மென்பொருள் உருவாக்கம் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக பிராந்திய மட்டத்தில் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு ஆங்கில மொழி வழிகாட்டல் மற்றும் தொழில்சார் பாடத்தை இலவசமாகக் கற்கும் வாய்ப்பை மார்ச் 5ஆம் திகதி முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 300 நிலையங்களைப் பயன்படுத்தி இந்தப் பயிற்சித் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், இவ்வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் இது போன்ற பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது குறித்து, பாடசாலை அதிபரின் ஆலோசனையினைப் பெற்று திறன் மேம்பாட்டு அலுவலர்களின் வழிகாட்டுதலின் கீழ், பாடசாலை நேரத்துக்குப் பின், அருகில் உள்ள மத்திய நிலையங்களுக்கு சென்று இரண்டரை மணி நேரம் நடக்கும் பயிற்சியில் சேரலாம் எனவும், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (04)

# ரணில் - பஷில் ராஜபக்ஷ விசேட கலந்துரையாடல்

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இறுதி தீர்மானம் எடுக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பஷில் ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை கருத்தில் கொண்டு வேட்பாளரை தெரிவு செய்வதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறன தொரு நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இறுதி தீர்மானம் எடுக்க எதிர் வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி இருவரும் கலந்துரையாடலில் இணைந்துகொள்ள வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு கடந்த டிசெம்பர் மாதம் அமெரிக்காவுக்கு சென்றிருந்த பஷில் ராஜபக்ஷ ஜனவரி மாத இறுதியில் நாடு திரும்புவதாக இருந்த போதிலும் இதுவரையில் நாட்டுக்கு வரவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் இவ்வார இறுதியில் அவர் இலங்கைக்கு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி வேட்பாளரை மையப்படுத்தி ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளை சமநிலைப்படுத்தவே பஷில் ராஜபக்ஷ நாடு திரும்புவதாகவும் அந்த தகவல்கள் மேலும் கூறியுள்ளன.

# ஜி மெயிலுக்கு பதிலாக எக்ஸ் மெயில் கூகுளிற்கு போட்டியாகும் மஸ்க்!




கூகுள் நிறுவனத்தின் ஜி மெயிலுக்கு போட்டியாக எக்ஸ் மெயில் என்ற பெயரில் மின்னஞ்சல் வசதியை எலான் மஸ்க் விரைவில் அறிமுகம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் எக்ஸ் தளத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான எலான் மஸ்க் அண்மையில் வெளியிட்டுள்ள அறிவிப்பானது கூகுள் நிறுவனத்துக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எக்ஸ் நிறுவனத்தின் பாதுகாப்புப் பொறியியல் குழுவில் பணியாற்றி வரும் நாதன் மெக்ராடி, எக்ஸ்-மெயிலை எப்போது அறிமுகம் செய்யப் போகிறோம்? என டுவீட் செய்திருந்தார்.

'ஐவள ஊழஅைபெ' என அதன் வரவு குறித்து மஸ்க், பதில் டுவீட் செய்துள்ளார். இதன்மூலம் எக்ஸ்-மெயில் எனும் இ-மெயில் சேவை குறித்த சூசக தகவலை அவர் பகிர்ந்துள்ளார்.

இந்த விடயம் இப்போது உலக அளவில் கவனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது








## இன்று பொத்துவில் கனகர் கிராமத்தில் ஆர்ப்பாட்டம்!

(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவில் மீள்குடியேற்ற கனகர் கிராமத்தில் பொதுமக்கள் இன்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த பல வருட காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு அண்மையில் 73 குடும்பங்களுக்கு காணிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இப்பத்திரங்கள் ஏனையவர்களுக்கு இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

இதனை காரணங்காட்டி அனைவருக்கும் காணிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று இன்று கனகர் கிராம மக்கள் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொத்துவில் பிரதேச செயலாளர் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும். எமக்கும் காணி உறுதிப் பத்திரம் வழங்க வேண்டும். காலா காலமாக இருந்து வந்த எமது பூர்வீக காணிகளை விரைவாக பூரணமாக ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

33வருடங்களாக காடுமண்டி மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களது காணிகள் பூரணமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

பொத்துவில்பிரதேசசபை முன்னாள் உப தவிசாளரும் சமுக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் த.சுபோதரன் உள்ளிட்ட பல பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர்.

அங்கு உப தவிசாளரும் சமுக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் கூறுகையில்,

இங்கு வாழ்ந்து வந்த மக்கள் 1985க்கு பின்னர் யுத்தத்தில் இடம்பெயர்ந்தனர். வாழ்ந்த 226 பேரில் முதல் கட்ட மாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவர்களுள் 73 பேருக்கு முதற் கட்டம் வழங்கி வைக்கப்பட்டன.

ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்பட்டது.

எம்மைப் பொறுத்தவரை அனைவருக்கும் இக் காணிகள் பகிரந்தளிக்கப்பட வேண்டும், என்றார்.

## கலைமகளில் கால்கோள் விழா



(வி.ரி.சகாதேவராஜா)

நாவிதன்வெளி வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான தரம் 1 இற்கு புதிய மாணவர்களை உள்வாங்கும் வித்தியாரம்ப நிகழ்வானது புதிதாகக் கடமையேற்ற அதிபர் க.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் அதிதியாக வேம்பையடிப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவசிறி நேசராசா குருக்களும், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி .02.2024 இல் வெளியிடப்பெற்றது.